# தேர்தல் ஆணைக்குழு

## பதவி வெற்றிடம்

தேர்தல் ஆணைக்குழுவில் தலைமை அலுவலகம் உள்ளிட்ட மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் பிரகாரம் வெற்றிடமாகியுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை பதவிகளுக்கு தற்போது மத்திய அரச சேவையில் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நிரந்தரமாக இடமாற்றல் செய்துகொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

| தொடரிலக்கம் | அலுவலகம் | அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | புத்தளம் | 02 |
| 02 | கம்பஹா | 02 |
| 03 | மாத்தறை | 01 |
| 04 | மன்னார் | 01 |
| 05 | நுவரெலியா | 02 |
| 06 | கிளிநொச்சி | 01 |
| 07 | கொழும்பு மாவட்டம் | 01 |
| 08 | கொழும்பு நகரம் | 01 |
| 09 | மட்டக்களப்பு | 01 |
| 10 | பதுளை | 01 |
| 11 | பொலன்னறுவை | 01 |
| 12 | திருகோணமலை | 01 |
| 13 | அம்பாறை | 01 |
| 14 | குருநாகல் | 01 |
| 15 | தேர்தல்கள் செயலகம் | 07 |

**பொதுவான நிபந்தனைகள்,**

I. மத்திய அரசாங்கத்தில் பணியாற்றும் வேலை வாய்ப்பற்ற பட்டதாரிகளை தொழிலில் ஈடுபடுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டம் - 2020 இன் கீழ் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் நிரந்தர நியமனத்தைப் பெற்றுக்கொண்டுள்ள உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

II. கணனிப் பயன்பாடு பற்றிய அறிவு மற்றும் மும்மொழி அறிவு

III. பதவிக்குரித்தான அலுவல்களை சிறப்பாக நிறைவேற்றவதற்குத் தேவையான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

IV. அரச சேவையில் நன்னடத்தையுடன் பணியாற்றும் அலுவலராக இருத்தல்.

V. தாபனவிதிக்கோவையின் XXXII ஆம் அத்தியாயத்தின் 1.1 இற்கமைய தேர்தல் ஆணைக்குழுவில் பணியாற்றும் அலுவலர்களுக்கு அரசியல் உரிமைகளை அனுபவிப்பதற்கான உரித்துரிமை இல்லை.

VI. விண்ணப்பதாரியின் குடும்ப அங்கத்தவரொருவர் அல்லது வாழ்க்கைத்துணையின் குடும்ப அங்கத்தவரொருவர் செயற்பாட்டு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிராத / ஈடுபடாத ஒருவராக இருத்தல் வேண்டும்.

VII. தேர்தல் காலப் பகுதியில் பொதுவான கடமை நேரத்திற்கு மேலதிகமாக வார இறுதி மற்றும் அரசாங்க விடுமுறை தினங்களிலும் கடமைகளை நிறைவேற்றல் வேண்டும்.

VIII. தேர்தல் ஆணைக்குழுவுக்கு இடமாற்றல் பெற்று வரும்போது அலுவலரின் அடிப்படைச் அடிப்படைச் சம்பளத்தின் 25% இனை மேலதிக படியொன்றாக மாதாந்தம் செலுத்தப்படும்.

**<u>விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முறை</u>**

அதற்கமைய, இடமாற்றல் பெற்று வருவதற்கு விரும்பும் அலுவலர்கள் அதற்கான கோரிக்கை கடிதமொன்றை தனது நிறுவனத் தலைவரின் பரிந்துரையுடன் **தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், தேர்தல்கள் செயலகம், சரண மாவத்தை, ராஜகிரிய**. எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அவ்வாறு கிடைக்கப்பெறும் கோரிக்கைகளுக்கமைய குறித்த அலுவலர்கள் தேர்தல் ஆணைக்குழுவில் பணியாற்றவதற்குப் பொருத்தமானவரா என்பதனைப் பரீட்சித்ததன் பின்னர் இணைந்த சேவைகள் பணிப்பாளருக்கு அறிவித்து இடமாற்றல் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**<u>குறிப்பு</u>**

பதிலாள் இன்றி அல்லது பின்னர் பெற்றக்கொள்ளப்படும் அடிப்படையில் சமர்ப்பிக்கப்படும் இடமாற்றல் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பின் பிரகாரம்,**

**சமன் ஸ்ரீ ரத்னாயக்க,**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

2024 மே மாதம் ..04..... ஆம் திகதி
தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
ராஜகிரிய.